**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் திங்கட்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.409/2023 [CNR No.TNMD240005992023]</u>**

கனரா வங்கி
உசிலம்பட்டி கிளை
மதுரை மாவட்டம்
(வங்கி மேலாளர் மூலமாக) .....வாதி

/ எதிர் /

1) சரவணன்

2) செல்வம் ......பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 09.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.கணேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பெ.செல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## தீர்ப்புரை

வாதியின் வங்கிக்கு பிரதிவாதிகள் கடந்த 26.10.2021–ம் தேதி வரையுள்ள பிராது தொகை ரூ.9,60,885.51/– உடன் தொகை ஈடாகும் நாள்வரை 9.75% வருட வட்டியை செலுத்தக் கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதி வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**1) வழக்குரையின் சுருக்கம்:–**

பிரதிவாதிகள் வாதியின் வங்கியை அணுகி 1–ம் பிரதிவாதியின் கல்விக்காக ரூ.2,72,000/– கடன் கேட்டு, கடந்த 15.11.2008–ம் தேதியன்று விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள். மேற்படி, வங்கியானது ரூ.2,43,500/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) கடன் தர அனுமதித்துள்ளது. வாதியின் வங்கி கடந்த 15.11.2008–ம் தேதியன்று 1–ம் பிரதிவாதிக்கு கல்விக் கடனாக ரூ.2,43,500/– கடன் தொகை வழங்கியுள்ளது. மேலும், கடந்த 15.11.2008–ம் தேதியில் 1–ம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு ஆண்டொன்றுக்கு 13% வட்டியுடன் 72 தவணைகளில் ஆகஸ்ட் மாதம் 2013–ம் ஆண்டு முதல் மேற்படி கடன் தொகையை திரும்பி செலுத்துவதாக பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளளார்கள். மேற்படி கடனுக்கு ஆதரவாக கடந்த 15.11.2008–ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் கல்விக்கடன் ஒப்பந்தம் ஒன்றை எழுதிக் கொடுத்துள்ளார்கள். 1–ம் பிரதிவாதியானவர் மேற்படி கடன் தொகையை முறையாக செலுத்தாததால் கடந்த 15.11.2008–ம் தேதியன்று வாதி வங்கியில் வாங்கிய கடனுக்கு ஆதரவாக அதே தேதியில் எழுதிக்கொடுத்த

கல்விக்கடன் ஒப்பந்தங்களை கொண்டு வாதி வங்கிக்கு கடந்த 26.10.2021–ம் தேதியன்று Acknowledgement of Debt– ஐ எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

அடுத்ததாக, பிரதிவாதிகள் வாதி வங்கியிடம் பெற்ற கடன் தொகையை முறையாக செலுத்தவில்லை. பலமுறை வாதி வங்கி நேரில் கேட்டும் பிரதிவாதிகள் கடன் தொகையை செலுத்த எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எனவே, பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி வங்கிக்கு வர வேண்டிய அசல் மற்றும் வட்டியை செலவு தொகையுடன் வரப்பற்றுவதற்காக தாவா வழக்கு வாதி வங்கியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்வழக்குரையின் சுருக்கம்:–**

வாதி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களில் பிரதிவாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட விசயங்கள் தவிர மற்ற விசயங்கள் யாவும் உண்மைக்கு புறம்பானது மற்றும் கற்பனையானதும் ஆகும். வாதியின் வழக்குரையில் கடந்த 15.11.2008–ம் தேதி 1–ம் பிரதிவாதி கல்வி கடன் கேட்டு மனு கொடுத்தார் என்பது உண்மையாகும். வாதியின் வங்கி பிரதிவாதிகளின் மனுவை பரிசீலனை செய்து ரூ.2,72,000/–ம் கல்வி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் வாத வங்கி ரூ.2,43,500/– மட்டும் பிரதிவாதிகளுக்கு கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதே தேதியில் பிரதிவாதிகள் வங்கிக்கு கடன் ஒப்பந்திர பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளார்கள். வாதியின் வழக்குரையில் பிரதிவாதிகள் கடன் தொகையை 1–ம் பிரதிவாதி வேலை கிடைத்து 6 மாதம் கழித்து திரும்ப செலுத்த

வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. வாதி வங்கிக்கு 2013–ம் ஆண்டு பிரதிவாதிகள் பெற்ற கடனுக்கு கடனை திரும்ப செலுத்தும் காலம் முடிந்து விட்டது. வாதி வங்கி தரப்பில் பிரதிவாதிகள் மீது 2013–ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். வாதியின் வங்கிக்கு கடந்த 26.10.2021–ம் தேதி பிரதிவாதி மேற்படி கடனுக்கு ஒப்புதல் கடிதம் எழுதிக் கொடுத்தார்கள் என்று கூறுவது சுத்த பொய் அதில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளின் கையெழுத்து அல்ல. வாதி தரப்பில் சட்ட கால வரையரைக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தரப்பில் காலவரையரைக்குள் தாக்கல் செய்யாதற்கான காரணங்களையும் கூறவில்லை. வாதி தரப்பில் போலியாக ஆவணங்களை உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தள்ளுபடி செய்ய கூடிய வழக்கு என பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** இவ்வழக்கின் வழக்குரை, எதிர் வழக்குரை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு வழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாண கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the plaintiff's Bank is entitled recovery of loan amount from the defendants as prayed for?
2. What other relief of the plaintiff is entitled?

**4)** வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 2–ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. எழுவினா ஒன்றுக்கான தீர்வு:–</u>**

1. வாதி கோரும் கடன் தொகை வட்டியுடன் பிரதிவாதிகளிடமிருந்து திரும்ப கிடைக்கத்தக்கதா?

முதலாவதாக, தாவா வழக்கில் வாதி வங்கியின் கிளை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் தன்னுடைய சாட்சியத்தில், கடந்த 15.11.2008–ம் தேதி பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கல்வி கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்தார். அதன் அடிப்படையில், வாதி வங்கி 1–ம் பிரதிவாதிக்கு ரூ.2,43,500/– கல்விக் கடனாக வழங்க அனுமதித்த கடிதம் வா.சா.ஆ.2–ஆக குறியீடு செய்தார். பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கல்வி கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்தார். வாதி வங்கியின் ஒப்பந்தப்படி 1–ம் பிரதிவாதி படிப்பை முடித்து ஒரு வருட காலத்திலோ அல்லது வேலை கிடைத்த ஆறு மாத காலத்திலோ வாதி வங்கிக்கு அசலும், வட்டியுமாக திரும்ப செலுத்த வேண்டும். பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு அசலும், வட்டியும் கடந்த 26.09.2023–ம் தேதி ரூ.9,48,220/– கடன் பாக்கி வைத்திருப்பதாக வா.சா.ஆ.5–தெளிவுபடுத்துகிறது.

அடுத்ததாக, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், ரூ.9,48,220/–கடன் இல்லை எனவும், ரூ.2,00,000/– வரை பிரதிவாதிகள் கடனை செலுத்திவிட்டார்கள் என்பதாகும். இதுசம்பந்தமாக, வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, வாதி வங்கியிலிருந்து பிரதிவாதிகள் வாங்கிய கடன் தொகையை வாதி வங்கி

திரும்ப வசூலிப்பதற்கான காலவரம்பு முடிந்துவிட்டது என்பதாகும். வா.சா.ஆ.3–ஒப்பந்தப்படி, 2019–ம் வருடம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 2016–ம் வருடம் வழக்கு தாக்கல் செய்யவில்லை என எதிர் வாதம் செய்தாலும், வா.சா.ஆ.3–ஒப்பந்தத்தை பரிசீலனை செய்யும் பொழுது, கடந்த 15.11.2009–ம் தேதியிட்டதாகும். மேற்படி, தேதியிலிருந்து 1–ம் பிரதிவாதி கல்லூரி படிப்பை எப்போது முடித்தார். அதன் பிறகு, 1–ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு எந்தெந்த தவணைகளில் பணத்தை திரும்ப செலுத்தினார் என்பதை பிரதிவாதிகள் தெளிவுபடுத்த வேண்டும். கடைசியாக, வா.சா.ஆ.4–ஐ பரிசீலனை செய்யும் பொழுது, கடந்த 26.10.2021–அன்று வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் ஒரு உயிர்ப்பிப்பு கடிதம் எழுதிக் கொடுத்தார்கள். ஆக, அன்றிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் தாவா வழக்கை தாக்கல் செய்தால் போதுமானது ஆகும். ஆக, வாதியின் வழக்கு காலவரம்பு சட்டத்தினால் பாதிப்பு எதுவும் அடையவில்லை. மேலும், பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு ரூ.2,00,000/– செலுத்தியதை தெளிவுபடுத்தவில்லை. எனவே, வாதி வங்கியிடமிருந்து வாங்கிய கடன் தொகையை பிரதிவாதிகள் வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும் என எழுவினா 1 –வாதி வங்கிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>6. எழுவினா 3–க்கான தீர்வு:–</u>**

3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ பிராது தொகை ரூ.9,60,885.51/-யை வாதி வங்கிக்கு திரும்ப செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் கடன் தொகை ரூ.2,43,500/-க்கு பிராது தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை வருட 9.75% வட்டியுடம் வாதிக்கு பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ திரும்ப செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருகெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 13:17:06 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**<u>வாதி தரப்பு சாட்சி:-</u>**

வா.சா.1 ஆல்பின்ராஜ் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.11.2008 | பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கல்வி கடன் விண்ணப்பம் அசல் |
| வா.சா.ஆ.2 | 15.11.2008 | வாதி வங்கியின் அனுமதி கடிதம் அசல் |
| வா.சா.ஆ.3 | 15.11.2008 | பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கல்விக்கடன் ஒப்பந்தம் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 26.10.2021 | பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த உயிர்ப்பிப்புக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.5 | 07.08.2023 | 1–ம் பிரதிவாதி பெயரில் வாதி வங்கி பராமரித்து வரும் கணக்கு பட்டியல் உண்மை நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:–**

பி.வா.சா.1 செல்வம் ( 2–ம் பிரதிவாதி)

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**

––– இல்லை –––

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 13:17:14 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.